பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை 7
குகைவாசிகள் பதிப்பகப் பாதை 14
ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு 21
முன்னுரை 23
1 நஃபில்களின் சிறப்பு 27
இரவுத் தொழுகை பற்றிய ஒரு கவிதை 28
2 நஃபில் தொழுகையின் சிறப்புகளும்
சில தூண்டல்களும் 29
3 முன்பின் ஸுன்னத் தொழுகைகளின் சிறப்புகள் 36
4 சுபுஹ் ஸுன்னத் இரண்டு ரக்அத்தை உறுதிப்படுத்துதல் 38
5 ஃபஜ்ரின் இரண்டு ரக்அத்தைச் சுருக்குதல் 40
6 ஃபஜ்ரின் ஸுன்னத்திற்குப் பின்
ஒருக்களித்துப்படுத்தல் 44
7 லுஹருடைய ஸுன்னத் 46
8 மஃரிப், இஷா தொழுகைகளின்
முன் பின் ஸுன்னத்துகள் 49
இஷாவுக்கு முன் பின் உள்ள
ஸுன்னத் தொழுகை 50
9 ஜும்ஆவின் ஸுன்னத் 52
10 வீட்டில் உபரித் தொழுகைகள் 53
11 வித்ரு தொழுகை 55
12 லுஹா தொழுகை 58
லுஹா தொழுகையின் நேரங்கள் 59
13 தஹிய்யத்துல் மஸ்ஜிது தொழுகை 61
14 தஹிய்யத்துல் வுளூ 62

15 ஜும்ஆவின் சிறப்புகளும் ஒழுங்குகளும் 63
16 ஸஜ்தா ஷுக்ர் – நன்றி செலுத்தும் ஸஜ்தா 68
17 இரவில் நின்று தொழுவதின் சிறப்பு 70
18 றமளானில் நின்று தொழ விரும்புதல்;
அதுவே தராவீஹ் 80
19 கத்ருடைய இரவில் நிற்பதின் சிறப்பும்
அதன் இரவும் 81
20 இஸ்திகாரா – நலவைத் தேடும்
தொழுகையும் துஆவும் 86
இஸ்திகாரா தொழுகையும் படிப்பினையும் 88
21 சுத்தம், துதிச் சொற்கள், தர்மம், குர்ஆன் 89
22 இரவிலும் பகலிலும் ஒரு முஸ்லிமுக்கு
ஷரீஅத் விதித்துள்ள அமல்கள் 90
23 இரு பெருநாள் தொழுகைகள் 95
நபி ﷺ அவர்களின் பெருநாள் 97
24 கிரகணத் தொழுகைக்கு ஏவுதலும்,
அதன் செயல்முறையும் 100
25 மழை தேடும் தொழுகை 103
மழை பெய்யாத நேரங்களில், நீர் வறட்சி நேரங்களில் மழைத்
தொழுகை தொழ விரும்புதல் 103
26 ஜனாஸா பற்றிய பாடம் 106
1. ஜனாஸாவின் சட்டங்கள் 106
2. ஜனாஸா தொழுகை முறை 107
3. ஜனாஸாவை விரைவுபடுத்துதல் 110
4. ஜனாஸா தொழுகையின் சட்டங்கள் 111
27 நோன்பில் விரும்பத்தகுந்தவை 116
28 நற்காரியங்களுக்குச் செலவழித்தல் 120
உசாத்துணை நூல்கள் 130

2

நஃபில் தொழுகையின் சிறப்புகளும் சில தூண்டல்களும்

பொதுவாக ஃபர்ள், நஃபில் உட்பட தொழுகைகள் யாவுமே அல்லாஹ்வுக்கும் அடியானுக்கும் இடையே இணைப்புப் பால மாகச் செயல்படுகின்றன. சின்னஞ்சிறு பாவங்களுக்கும் குற்றங் களுக்கும் பரிகாரமாக விளங்குகின்றன. தடுக்கப்பட்ட, மானக் கேடான காரியங்களை விட்டும் தடுக்கின்றன.

ஒரு தொழுகையாளிக்கு அவரது தொழுகையே ஒளியாகவும், மறுமையில் வெற்றியாகவும் இருக்கிறது. நமது நபி ﷺ அவர்கள் நாளொன்றுக்கு நாற்பது ரக்அத்துகளைப் பேணித் தொழுபவராக இருந்துள்ளார்கள் என்பதே நமக்கு நல்லதொரு முன்மாதிரியாகும். கொஞ்சம் கணக்குப் போட்டுப் பார்த்தால் இந்த உண்மை மிக எளிதாக நமக்கு விளங்கும்.

ஐந்து நேரத் தொழுகைகளின் ரக்அத்துகள் – *17 (2+4+4+3+4)*

ஐந்து நேரத் தொழுகைகளின் முன்/பின் சுன்னத்துத் தொழு கைகளின் ரக்அத்துகள் *10* அல்லது *12*

இரவு தொழுகையின் ரக்அத்துகள் *11* அல்லது *13*

ஆக மொத்தம் *40*

இமாம் இப்னு கய்யூம் ﷺ சொல்கிறார்: ஒருவர் தினமும் தனது எஜமானரின் வாசல் கதவை நாற்பது தடவை தட்டிக்கொண்டே இருந்தால் அவருக்கு வெகு விரைவாகவே பதிலளிக்கப்படுமா, இல்லையா?... அவ்வாறுதான் இந்த நாற்பது ரக்அத்துகளும் அவருக்கு அல்லாஹ்வின் பதிலைப் பெற்றுத் தருகிறது. மேலும், ஃபர்ளான தொழுகையில் ஏற்படும் குற்றங்குறைகளை இந்த முன் பின்னுள்ள நஃபில் தொழுகைகள் சரி செய்கின்றன.

6

ஃபஜ்ரின் ஸுன்னத்திற்குப் பின் ஓருக்களித்துப்படுத்தல்

⁂

ஃபஜ்ருடைய இரண்டு ரக்அத்திற்குப் பிறகு வலது விலாப்புறத்தில் ஒருக்களித்துப் படுத்தல், இரவில் தஹஜ்ஜுத் தொழுதிருந்தாலும், தொழாவிட்டாலும் மேற்கண்டவாறு படுக்கத் தூண்டுதல் மற்றும் விரும்புதல் குறித்து இங்குக் காணலாம்.

ஆயிஷா ﵂ அவர்கள் அறிவிக்கிறார்கள்:

كَانَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ إِذَا صَلَّى رَكْعَتَيِ الفَجْرِاضْطَجَعَ عَلَى شِقِّهِ الأَيْمَنِ

நபி ﷺ அவர்கள் ஃபஜ்ருடைய இரண்டு ரக்அத்தைத் தொழுதுவிட்டால், வலது விலாப் பக்கத்தில் சாய்ந்துப் படுப்பவர்களாக இருந்தார்கள். *(புகாரீ 1160)*

ஆயிஷா ﵂ அவர்கள் அறிவிக்கிறார்கள்:

كَانَ رَسُولُ اللَّهِ -صلى الله عليه وسلم- يُصَلِّى فِيمَا بَيْنَ أَنْ يَفْرُغَ مِنْ صَلاَةِ الْعِشَاءِ - وَهِىَ الَّتِى يَدْعُو النَّاسُ الْعَتَمَةَ - إِلَى الْفَجْرِ إِحْدَى عَشْرَةَ رَكْعَةً يُسَلِّمُ بَيْنَ كُلِّ رَكْعَتَيْنِ وَيُوتِرُ بِوَاحِدَةٍ فَإِذَا سَكَتَ الْمُؤَذِّنُ مِنْ صَلاَةِ الْفَجْرِ وَتَبَيَّنَ لَهُ الْفَجْرُ وَجَاءَهُ الْمُؤَذِّنُ قَامَ فَرَكَعَ رَكْعَتَيْنِ خَفِيفَتَيْنِ ثُمَّ اضْطَجَعَ عَلَى شِقِّهِ الأَيْمَنِ حَتَّى يَأْتِيَهُ الْمُؤَذِّنُ لِلإِقَامَةِ

நபி ﷺ அவர்கள் இஷா தொழுகை முடித்து ஃபஜ்ர் வரை பதினொரு ரக்அத் தொழுபவர்களாக இருந்தார்கள். இதில் ஒவ்வொரு இரண்டு ரக்அத்துகளுக்கும் இடையே ஸலாம் கொடுத்து இறுதியாக ஒரு ரக்அத் வித்ரு தொழுவார்கள். ஃபஜ்ரு தொழுகைக்கு (பாங்கு சொல்லி) மூஅத்தின் மவுனமாக இருந்தால், ஃபஜ்ர் நேரம் வந்துவிட்டது தெளிவானால், மூஅத்தின் வந்துவிட்டார் என்றால், நபி ﷺ அவர்கள் எழுந்து சுருக்கமாக இரண்டு ரக்அத் தொழுவார்கள். பிறகு வலது விலாப்புறத்தின்மீது படுத்துக்கொள்வார்கள்.

12

லுஹா தொழுகை

⁂

லுஹா தொழுகையின் சிறப்பு, இதில் குறைவான அளவு, நிறைவான அளவு, நடுநிலையான அளவு பற்றி விவரித்தல், அதைப் பேணுவதின்மீது தூண்டுதல் ஆகிய விசயங்களை இங்குத் தெரிந்து கொள்வோம்.

அபூ ஹுறைறா ﵁ அவர்கள் அறிவிக்கிறார்கள்:

أَوْصَانِي خَلِيلِي -صلى الله عليه وسلم- بِثَلاَثٍ بِصِيَامِ ثَلاَثَةِ أَيَّامٍ مِنْ كُلِّ شَهْرٍ وَرَكْعَتَيِ الضُّحَى وَأَنْ أُوتِرَ قَبْلَ أَنْ أَرْقُدَ

ஒவ்வொரு மாதமும் மூன்று நாள் நோன்பு வைக்க வேண்டும் என்றும் இரண்டு ரக்அத் லுஹா தொழ வேண்டும் என்றும் உறங்கும் முன் வித்ரு தொழ வேண்டும் என்றும் என் நேசர் (நபி ﷺ அவர்கள்) எனக்கு உபதேசம் செய்தார்கள். (புகாரீ 1981, முஸ்லிம் 721)

இரவின் இறுதியில் எழுவோம் என்ற உறுதியான நிலைப்பாடு இல்லாதவர் உறங்கும் முன் வித்ரு தொழுவது விரும்பத் தகுந்த தாகும். உறுதி இருந்தால், இரவின் இறுதியில் வித்ரு தொழுவதே மிகச் சிறந்ததாகும்.

அபூ தர் ﵁ அறிவிக்கிறார்கள், நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

يُصْبِحُ عَلَى كُلِّ سُلاَمَى مِنْ أَحَدِكُمْ صَدَقَةٌ فَكُلُّ تَسْبِيحَةٍ صَدَقَةٌ وَكُلُّ تَحْمِيدَةٍ صَدَقَةٌ وَكُلُّ تَهْلِيلَةٍ صَدَقَةٌ وَكُلُّ تَكْبِيرَةٍ صَدَقَةٌ وَأَمْرٌ بِالْمَعْرُوفِ صَدَقَةٌ وَنَهْىٌ عَنِ الْمُنْكَرِ صَدَقَةٌ وَيُجْزِئُ مِنْ ذَلِكَ رَكْعَتَانِ يَرْكَعُهُمَا مِنَ الضُّحَى

உங்கள் ஒவ்வொருவரின் மூட்டு (இணைப்பு) எழும்புகளின்மீது தர்மம் (கடமையாக) இருக்கிறது. ஒவ்வொரு தஸ்பீஹும் தர்மம், ஒவ்வொரு தஹ்மீது (அல்லாஹ்வை புகழ்தலு)ம் தர்மம்,

13

தஹிய்யத்துல் மஸ்ஜிது தொழுகை

*

தஹிய்யத்துல் மஸ்ஜிது எனும் பள்ளிவாசலுக்குரிய காணிக்கைத் தொழுகை ஆர்வமூட்டப்பட்ட ஒன்றாகும். வழமையான அல்லது வழமை இல்லாத ஸுன்னத் தொழுகை அல்லது ஃபர்ளு தொழுகை என எதுவாக இருப்பினும், எந்த நேரத்தில் நுழைந்தாலும் இரண்டு ரக்அத் மஸ்ஜிதுக்கான காணிக்கை நிய்யத்துடன் தொழுவதற்கு முன் அமர்வது மக்ரூஹ் – வெறுக்கத்தக்கதாகும்.

அபூ கதாதா ﵁ அறிவிக்கிறார்கள், நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

إِذَا دَخَلَ أَحَدُكُمُ المَسْجِدَ، فَلاَ يَجْلِسْ حَتَّى يُصَلِّيَ رَكْعَتَيْنِ

உங்களில் ஒருவர் மஸ்ஜிதுக்குள் நுழைந்தால், இரண்டு ரக்அத் தொழும்வரை அமர வேண்டாம். *(புகாரீ 57, முஸ்லிம் 714)*

ஜாபிர் ﵁ அவர்கள் அறிவிக்கிறார்கள்:

أَتَيْتُ النَّبِيَّ - صلى اللهُ عليه وسلَّم - وَهُوَ فِي الْمَسْجِدِ - قَالَ مِسْعَرٌ: أُرَاهُ قَالَ: ضُحًى - فَقَالَ: صَلِّ رَكْعَتَيْنِ

நபி ﷺ அவர்கள் மஸ்ஜிதில் இருக்கும்போது அவர்களிடம் நான் வந்தேன். 'இரண்டு ரக்அத் நீர் தொழுவீராக! என்று சொன்னார்கள். *(புகாரீ 443, முஸ்லிம் 715)*

15

ஜுமுஆவின் சிறப்புகளும் ஒழுங்குகளும்

*

ஜுமுஆவின் சிறப்புகள், ஜுமுஆ அன்று கடமையாக உள்ளவை, ஜுமுஆவிற்காகக் குளித்தல், நறுமணம் பூசுதல், ஜுமுஆவுக்கு விரைந்து செல்லல், ஜுமுஆ நாளன்று துஆ செய்தல், நபிமீது ஸலவாத்துச் சொல்லல், துஆவுக்குப் பதில் அளிக்கப்படும் நேரம் பற்றி விவரித்தல், ஜுமுஆவுக்குப் பின் அல்லாஹ்வின் திக்ரை அதிகப்படுத்துதல் ஆகிய விசயங்களை இங்கு அறிவோம்.

அல்லாஹ் கூறுகிறான்:

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا إِذَا نُودِيَ لِلصَّلَاةِ مِنْ يَوْمِ الْجُمُعَةِ فَاسْعَوْا إِلَى ذِكْرِ اللَّهِ وَذَرُوا الْبَيْعَ ذَلِكُمْ خَيْرٌ لَكُمْ إِنْ كُنْتُمْ تَعْلَمُونَ فَإِذَا قُضِيَتِ الصَّلَاةُ فَانْتَشِرُوا فِي الْأَرْضِ وَابْتَغُوا مِنْ فَضْلِ اللَّهِ وَاذْكُرُوا اللَّهَ كَثِيرًا لَعَلَّكُمْ تُفْلِحُونَ

ஈமான்கொண்டவர்களே! ஜுமுஆவுடைய தினத்தன்று தொழுகைக்காக (நீங்கள்) அழைக்கப்பட்டால், அல்லாஹ்வை நினைவு கூர்வதின் பக்கம் நீங்கள் விரைந்து செல்லுங்கள். (இன்னும் அந்த நேரத்தில்) வியாபாரத்தை விட்டுவிடுங்கள். நீங்கள் (இதன் பலனை) அறிந்தவர்களாய் இருந்தால், இதுதான் உங்களுக்கு மிகச் சிறந்ததாகும்.

பிறகு தொழுகை நிறைவேற்றப்பட்டுவிட்டால், பூமியில் நீங்கள் பரவிச் சென்று அல்லாஹ்வுடைய அருட்கொடையைத் தேடிக் கொள்ளுங்கள். நீங்கள் வெற்றி பெறுவதற்காக அல்லாஹ்வை அதிகமாக நினைவுகூருங்கள். (குர்ஆன் 62:10)

அபூ ஹுறைறா ﷺ அறிவிக்கிறார்கள், அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

خَيْرُ يَوْمٍ طَلَعَتْ عَلَيْهِ الشَّمْسُ يَوْمُ الْجُمُعَةِ فِيهِ خُلِقَ آدَمُ وَفِيهِ أُدْخِلَ الْجَنَّةَ وَفِيهِ أُخْرِجَ مِنْهَا

16

ஸஜ்தா ஷுக்ர் – நன்றி செலுத்தும் ஸஜ்தா

*

வெளிப்படையான அருள் கிடைக்கும் நேரத்தில் அல்லது வெளிப் படையாக சோதனை அகலும் நேரத்தில் நன்றிக்கடனாக ஸஜ்தா செய்வதற்கு விரும்ப வேண்டும்.

ஸஅத் இப்னு அபீ வக்காஸ் ﵁ அவர்கள் அறிவிக்கிறார்கள்:

خَرَجْنَا مَعَ رَسُولِ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ مِنْ مَكَّةَ نُرِيدُ الْمَدِينَةَ، فَلَمَّا كُنَّا قَرِيبًا مِنْ عَزْوَرَا نَزَلَ، ثُمَّ رَفَعَ يَدَيْهِ فَدَعَا اللَّهَ سَاعَةً، ثُمَّ خَرَّ سَاجِدًا فَمَكَثَ طَوِيلًا، ثُمَّ قَامَ فَرَفَعَ يَدَيْهِ فَدَعَا اللَّهَ سَاعَةً، ثُمَّ خَرَّ سَاجِدًا فَمَكَثَ طَوِيلًا، ثُمَّ قَامَ فَرَفَعَ يَدَيْهِ سَاعَةً، ثُمَّ خَرَّ سَاجِدًا – ذَكَرَهُ أَحْمَدُ ثَلَاثًا – قَالَ: إِنِّي سَأَلْتُ رَبِّي وَشَفَعْتُ لِأُمَّتِي، فَأَعْطَانِي ثُلُثَ أُمَّتِي فَخَرَرْتُ سَاجِدًا شُكْرًا لِرَبِّي، ثُمَّ رَفَعْتُ رَأْسِي فَسَأَلْتُ رَبِّي لِأُمَّتِي فَأَعْطَانِي ثُلُثَ أُمَّتِي فَخَرَرْتُ سَاجِدًا لِرَبِّي شُكْرًا، ثُمَّ رَفَعْتُ رَأْسِي، فَسَأَلْتُ رَبِّي لِأُمَّتِي فَأَعْطَانِي الثُّلُثَ الْآخِرَ فَخَرَرْتُ سَاجِدًا لِرَبِّي

அல்லாஹ்வின் தூதருடன் மக்காவிலிருந்து மதீனாவை நோக்கிச் சென்றுகொண்டிருந்தோம். மக்கா அருகிலுள்ள 'அஜ்வரா' எனும் இடத்திற்கு வந்தபோது, அவ்விடத்தில் (நபி ﷺ அவர்கள்) தங்கி, இருக்கையையும் உயர்த்திக் கொஞ்ச நேரம் அல்லாஹ்விடம் துஆ செய்தார்கள். பிறகு, ஸஜ்தாவில் விழுந்து நீண்டநேரம் இருந்தார் கள். பிறகு எழுந்து நின்று இருக்கையையும் உயர்த்தினார்கள். மீண்டும் ஸஜ்தாவில் விழுந்தார்கள். இவ்வாறு மூன்று முறை செய்தார்கள். பிறகு சொன்னார்கள்: அல்லாஹ்விடத்தில் நான் (சில விசயங்களைக்) கேட்டேன். என் சமுதாயத்திற்காகச் சிபாரிசு (ஷஃபாஅத்) செய்தேன், அப்போது (அல்லாஹ்) எனக்கு என் உம்மத்தில் மூன்றில் ஒரு பகுதியினரைக் கொடுத்தான். எனவே, நான் என் ரப்புக்கு நன்றி செலுத்தும் விதமாக ஸஜ்தாவில் விழுந்தேன்.

20

இஸ்திகாரா – நலவைத் தேடும் தொழுகையும் துஆவும்

⁂

ஜாபிர் ﵁ அறிவிக்கும் நபிமொழி ஒன்று புகாரீயில் உள்ளது:

كَانَ رَسُولُ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يُعَلِّمُنَا الِاسْتِخَارَةَ فِي الْأُمُورِ كَمَا يُعَلِّمُنَا السُّورَةَ مِنَ الْقِرَانِ يَقُولُ لَنَا: إِذَا هَمَّ أَحَدُكُمْ بِالْأَمْرِ فَلْيَرْكَعْ رَكْعَتَيْنِ غَيْرَ الْفَرِيضَةِ ثُمَّ لِيَقُلِ: اللَّهُمَّ إِنِّي أَسْتَخِيرُكَ بِعِلْمِكَ وَأَسْتَقْدِرُكَ بِقُدْرَتِكَ وَأَسْأَلُكَ مِنْ فَضْلِكَ الْعَظِيمِ، فَإِنَّكَ تَقْدِرُ وَلَا أَقْدِرُ وَتَعْلَمُ وَلَا أَعْلَمُ وَأَنْتَ عَلَّامُ الْغُيُوبِ، اللَّهُمَّ إِنْ كُنْتَ تَعْلَمُ هَذَا الْأَمْرَ، يُسَمِّيهِ بِعَيْنِهِ الَّذِي يُرِيدُ، خَيْرًا لِي فِي دِينِي وَدُنْيَايَ وَمَعَاشِي وَمَعَادِي وَعَاقِبَةِ أَمْرِي فَاقْدُرْهُ لِي وَيَسِّرْهُ لِي وَبَارِكْ لِي فِيهِ، اللَّهُمَّ وَإِنْ كُنْتَ تَعْلَمُهُ شَرًّا لِي مِثْلَ الْأَوَّلِ فَاصْرِفْهُ عَنِّي وَاصْرِفْنِي عَنْهُ وَاقْدُرْ لِيَ الْخَيْرَ حَيْثُ كَانَ ثُمَّ أَرْضِنِي بِهِ

அல்லாஹ்வின் தூதர் ﷺ எங்களுக்கு எல்லா விசயங்களிலும் நலவைத் தேடுவது எப்படி என்று குர்ஆனைக் கற்றுக் கொடுப் பதுபோல் கற்றுக்கொடுத்தார்கள். உங்களில் ஒருவர் ஏதாவது ஒரு காரியத்தைச் செய்ய விரும்பினால், ஃபர்ள் அல்லாமல் இரண்டு ரக்அத் தொழட்டும். பிறகு சொல்லட்டும்:

(அல்லாஹும்ம இன்னீ அஸ்தஹீருக பிஇல்மிக, வஅஸ்தக்திருக பிருத்ரதிக, வஅஸ்அலுக மின் ஃபள்லிகல் அளீமி, ஃபஇன்னக தக்திரு வலா அக்திரு, வதஅலமு வலா அஅலமு, வஅன்த அல்லாமுல் நுயூபி, அல்லாஹும்ம இன் குன்த தஅலமு அன்ன ஹாதல் அம்ர ஹைருன் லீ ஃபீ தீனீ வமஆஷீ வஆகிபதி அம்ரீ, ஃபக்துர்ஹு லீ, வயஸ்ஸிர்ஹு லீ, சும்ம பாரிக் லீ ஃபீஹி, வஇன் குன்த தஅலமு அன்ன ஹாதல் அம்ர ஷர்ருன் லீ ஃபீ தீனீ வமஆஷீ வஆகிபதி அம்ரீ, ஃபஸ்ரிஃப்ஹு அன்னீ, வஸ்ரிஃப்னீ அன்ஹு, வக்துர் லீல் ஹைர ஹைசு கான, சும்ம அர்ளினீ பிஹி)

22

இரவிலும் பகலிலும் ஒரு முஸ்லிமுக்கு ஷரீஅத் விதித்துள்ள அமல்கள்

⁂

அல்லாஹ் ஒரு முஸ்லிமுக்கு தினசரி செய்ய வேண்டிய அமல்களை விதித்துள்ளான். அவற்றைக் கொண்டுதான் அடியான் அல்லாஹ்வை நெருங்க முடியும்; தனது ஈமானை பலப்படுத்திக் கொள்ள முடியும்; அவனுடைய பாதுகாப்புக்கும் நிம்மதிக்கும் அவையே காரணமாக அமையும். தீமைகளை வெறுப்பதற்கும் நன்மைகளைப் பெருக்குவதற்கும் அந்தஸ்துகளை உயர்த்திக்கொள்வதற்கும் அந்த அமல்களே மூல காரணமாகும். அவையாவன:

1. இரவு பகலாக மொத்தம் 40 ரக்அத்துகள். அவற்றை நபி ﷺ அவர்கள் விடாது பேணி வந்தார்கள் என்பதே நமக்கான அவர்களது அழகிய முன்மாதிரி ஆகும். அவை:

   ஃபர்ளான தொழுகைகள் 17 ரக்அத்துகள், வழமையான ஸுன்னத்துத் தொழுகைகள் 10 அல்லது 12 ரக்அத்துகள், இரவுத் தொழுகை மற்றும் வித்ருத் தொழுகை 11 அல்லது 13 ரக்அத்துகள் இவை மொத்தம் 40 ரக்அத்துகள். இவை தவிர பொதுவான நஃபில்கள், லுஹா என முன்னர் நாம் கூறியபடி வேறு தொழுகைகளும் உண்டு.

2. காலை மாலை திக்ருகள், உறங்கச் செல்லுதல், விழித்தல், சாப்பிடுதல், குடித்தல் போன்வற்றிற்கான திக்ருகள், தொழுகையிலிருந்து ஸலாம் கொடுத்த பின் ஓத வேண்டிய துஆக்கள் எனதுஆக்களும் திக்ருகளும் நிறைய இது சம்பந்தமான நூல்களில் உள்ளன.

3. தினசரி குறைந்தது ஒரு ஜுஸ்வு ஆவது குர்ஆன் ஓதுவது அல்லது இயன்ற அளவு ஓதுவது.

4. தினசரி இரவு பகல் இஸ்திக்ஃபார், தவ்பா செய்வதை வழமையாக்கிக்கொள்வது. அல்லாஹ் கூறுகிறான்:

26

ஜனாஸா பற்றிய பாடம்

*

சிறு கவிதை

குளிப்பாட்டல், க.·.பனிடல், தொழுகை, பிறகு அடக்குதல் இவை யாவும்
·.பர்ளு கி.·.பாயாவாம்.
கா.·.பிர்களின் போர்க்களத்தில் கொல்லப்பட்டவர்கள்
குளிப்பாட்டப்படமாட்டார்களாம்.
நீரில் மூழ்கி, சுவர் இடிந்து விழுந்து இறந்தவர்கள், வயிற்று வலியால்,
நெருப்பால் இறந்தவர்கள் இவர்கள் யாவரும் தொழவைக்கப்படமாட்டார்கள்.
குறைபிரசவப் பிள்ளைகள் அப்படியே அடக்கப்படும் க.·.பனிட்டு!
தற்கொலை செய்துகொண்டோர் உயிர் ஊதப்பட்ட பின்னரே...
(என்னவென்று அறியப்படும்)

1. ஜனாஸாவின் சட்டங்கள்

ஒருவரின் மரணம் உறுதியாகிவிட்டால், அவரது இரண்டு கண்களும் உடனடியாக மூடப்பட்டு, தாடை கட்டப்படும். அவரது வயிற்றின் மேல் (ஊதாமல் இருப்பதற்காக) கண்ணாடி, இரும்புத் துண்டு போன்றவை வைக்கப்படும். குளிப்பாட்ட ஆரம்பித்தால் மர்மஸ்தலங்கள் மறைக்கப்படும். பிறகு, மென்மையாக (அசுத்தங்கள் வெளியே வர) அவரது வயிறு அமுக்கப்படும். பிறகு, குளிப்பாட்டுபவர் தமது கையில் ஒரு துணியைச் சுற்றிக் கொண்டு மய்யித்துக்கு வுளூ செய்துவிடுவார். பிறகு, தலையையும் தாடியையும் இலந்தை இலை நீரால் கழுவிவிடுவார். பிறகு, வலப்புறம், இடப்புறம் குளிப்பாட்டுவார். இவ்வாறே இரண்டு மூன்று முறை குளிப்பாட்டுவார். ஏதாவது வெளியானால் கழுவிவிட்டு அவ்விடத்தில் பஞ்சை வைத்து அடைப்பார். அதற்கும் சரி வராவிட்டால் களிமண்ணை வைத்து அடைப்பார். பிறகு, திரும்பவும் மய்யித்தின் வுளூவை மீட்டுவார்.

27

நோன்பில் விரும்பத்தகுந்தவை



கீழ்கண்ட நாட்கள் நோன்பில் விரும்பத்தகுந்தவையாகும்.

1. ஹாஜி அல்லாதவர்களுக்கு அறஃபா நாள்: அதாவது துல் ஹஜ்ஜு பிறை 9ஆம் நாள் நோன்பு நோற்பதாகும்.

وَسُئِلَ عَنْ صَوْمِ يَوْمِ عَرَفَةَ فَقَالَ يُكَفِّرُ السَّنَةَ الْمَاضِيَةَ وَالْبَاقِيَةَ

அறஃபா (துல்ஹஜ் ஒன்பதாவது) நாளில் நோன்பு நோற்பது பற்றிக் கேட்கப்பட்டதற்கு நபி ﷺ கூறினார்கள்: 'முந்தைய ஓராண்டிற்கும் பிந்தைய ஓராண்டிற்கும் அது பாவப்பரிகாரமாக அமையும்' என்றார்கள். (அபூ கதாதா ؓ, முஸ்லிம் *1162*)

2. ஆஷூறா நாள்: அதாவது முஹர்ரம் பிறை 9 மற்றும் 10ஆம் நாள் நோன்பு நோற்பதாகும்.

وَسُئِلَ عَنْ صَوْمِ يَوْمِ عَاشُورَاءَ فَقَالَ يُكَفِّرُ السَّنَةَ الْمَاضِيَةَ

ஆஷூரா (முஹர்ரம் பத்தாவது) நாளில் நோன்பு நோற்பது குறித்து வினவப்பட்டது. அதற்கு நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: 'அது கடந்த ஆண்டின் பாவப்பரிகாரமாகும்' என்றார்கள். (அறிவிப்பு: அபூ கதாதா ؓ, முஸ்லிம் *1162*)

நபி ﷺ அவர்கள் தாமும் ஆஷூறா அன்று நோன்பு நோற்று, அந்நாளில் நோன்பு நோற்கவும் கட்டளையிட்டார்கள்.

لَئِنْ بَقِيتُ إِلَى قَابِلٍ لأَصُومَنَّ التَّاسِعَ

'வரும் வருடம் நான் உயிரோடு இருந்தால், ஒன்பதாம் நாளும் நோன்பு நோற்பேன்' என்றார்கள். (அறிவிப்பு: இப்னு அப்பாஸ் ؓ, முஸ்லிம் *1134*)